# அகநானூற்றுப் பாடல்களில் பெண்மைக் கருத்தமைவு

# Concept of femininity in Akananuru Poems

**மணிமேகலை. இர,** தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, பீளமேடு,கோயம்புத்தூர் -641004.

**Manimegalai.R,** Department of Tamil, PSGR Krishnammal College for women, Peelamedu, Coimbatore- 641004.

ORCID: https://orcid.org/0000-0002-7060-8551

DOI: 10.5281/zenodo.14653898

**Abstract**

A woman who lives a cooperative life with a man has to re-examine the concepts of femininity along the path she has traveled in order to maintain her own place and live her own life. Feminist discourses and anatomical records must be examined to understand the concept of femininity. It is also essential to consider how the presence of the leader is portrayed. Her presence includes the woman's makeup and her physical nature. The views of scholars help us to analyze the concept of femininity. Many scholars, including Tolkappiyar, have put forward different views. Their views reflect the structure of femininity. The songs of Akananuutupulavara clearly explain femininity. Therefore, this article examines the concept of femininity mentioned in the Akhananuthu songs.

**ஆய்வுச் சுருக்கம்**

ஆணுடன் இணைந்து கூட்டுறவு வாழ்க்கை வாழும் பெண் தனக்கான இடத்தைத் தக்கவைத்துக்கொள்ள, தனக்கான வாழ்வை வாழப் பெண்மை குறித்தான கருத்தாக்கங்களைத் தாம் கடந்துவந்த பாதை வழியே மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. பெண்மை குறித்தான கருத்தமைவை அறிய பெண்குறித்த சொல்லாடல்களையும் உடற்கூறு சார்ந்த பதிவுகளையும் ஆய்வுக்குட்படுத்த வேண்டும்.

பெண்மை குறித்த கருத்தமைவை ஆய்வு செய்ய அறிஞர்களின் கருத்துக்கள் நமக்கு உதவுகின்றன. தொல்காப்பியர் உட்பட ஏராளமான அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அவர்தம் கருத்து பெண்மை குறித்த கட்டமைப்பை உணர்த்துகின்றன. அகநானூற்றுப்புலவர்களின் பாடல்கள் பெணியல்பைத் தெற்றென விளக்குகின்றன.எனவே அகநானூற்றுப் பாடல்கள் குறிப்பிடும் பெண்மை குறித்த கருத்தமைவை ஆய்வு செய்யும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

**Key words :** Presenting the position of women through the concepts such as matappa, nanam, harshness, softness etc. பெண்மை குறித்த சொல்லாடல்கள், அகநானூற்றுப்பாடல்கள் வழி பெண்மை குறிக்கும் மடப்பம், நாணம், வன்மை, மென்மை முதலான கருத்தமைவுகள் வழி பெண் நிலைகுறித்து முன்வைத்தல்.

**'பெண்மை' கருத்தமைவு**

'பெண்' என்ற சொல் பாலினத்தைக் குறித்தாலும் பெண் என்ற சொல்லுடன் பின்னொட்டாக இணையும் 'மை' விகுதி பெண்ணின் நடத்தைகள் உணர்வு வெளிப்பாடு இவற்றை வரையறுப்பதாக அமைகின்றது. களவு வாழ்வில் தலைவன் தலைவியை எதிர்கொள்ளும் போது இருவருக்கும் உரித்தான இயல்பைத் தொல்காப்பியர் முன்வைக்கிறார். 'பெருமையும் உரனும் ஆடூமேன' என ஆண்மகனுக்கும் 'அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்' எனப் பெண்மகளுக்கும் உரிய இயல்புகளாகத் தொல்காப்பியர் தம் காலச் சமுதாயம் கொண்டிருந்த வாழ்வியல் மதிப்புகளைப் பதிவு செய்கிறார்.

களவு வாழ்வின்போது ஆணுக்கு வலியுறுத்தப்பட்ட பழிபாவங்களுக்கு அஞ்சவேண்டிய பெருமையும் அறிவும் என்ற இயல்பும் பெண்ணுக்கு வலியுறுத்தப்பட்ட அச்சம், நாணம், பேதமை ஆகிய இயல்பும் 'ஆண்மை' 'பெண்மை' என்ற ஆளுமை உருவாக்கத்திற்குத் துணை நின்றன எனக் கொள்ள முடியும். பெண்மை குறித்தான கருத்தாக்கங்களை அறிய பெண் குறித்த சொல்லாடல்களிலிருந்தே தொடங்கவேண்டும். அதற்கு முன் பெண்மை கருத்தாக்கம் குறித்த அறிஞர்களின் கருத்தை அறிய வேண்டும்.

ஆண்மை, பெண்மை என்பன உயிரியல்கூறு, உடற்கூறு இவற்றை ஒட்டியதோ கடவுளால் அருளப்பட்டவையோ அல்ல என்றும் இவை மனிதரின் சிந்தனைபோக்கு செயல்பாடு ஆகியவற்றின் ஒருபகுதியாக அமைந்தவை என்றும் ஆண்மை, பெண்மை குறித்து கீதா,கிறிஸ்டி சுபத்ரா ஆகியோர் பதிவு செய்கின்றனர் (பாலினப்பாகுபாடும்சமூகஅடையாளங்களும் - கீதா.வ,கிறிஸ்டிசுபத்ரா. ப.70). சமூகவியல் சார்ந்த ஆண் பெண் பண்பாடுகளை ஆய்வு செய்த கேட்மில்லட்டின் கருத்துக்கள் சிந்தனைக்குரியவை. அவர் ஆண்மை, பெண்மை குறித்து, "ஆண், பெண் பாகுபாட்டிற்கும் ஆண்மை பெண்மை என்ற சமூகப்பாகுபாட்டிற்கும் வேறுபாடுள்ளது. முன்னது உயிரியல் அடிப்படையில் இயற்கையாக அமைந்த ஒன்று. பின்னது சமூகச்சூழலில் பண்பாட்டுப் பின்னணியில் நடத்தைகளைக் கொண்டு கற்பிக்கப்பட்டது" என்று கூறுகிறார். இந்த ஆண், பெண் வரையறைகளும்கூட ஆணால் உருவாக்கப்பட்டது என்பது அறிஞர் கருத்து (பெண்ணியம் உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும் - சாரதாம்பாள்.செ,ப.23).

**'பெண்மை' - சொல்லாடல்கள்**

பெண்மை குறித்த கருத்தமைவை உருவாக்க அடிப்படை அமைக்கும் 'பெண்மை', மடப்பம், நாணம், கற்பு, மென்மை போன்ற சொற்களையும் அதன் பொருண்மையை விளக்கும் சூழல்களையும் மிகச்சிறப்பாக அகநானூற்றுப்பாடல்கள் பதிவுசெய்துள்ளன. பெண்மை குறித்து ஜெர்மெய்ன்கிரீர் பின் வருமாறு குறிப்பிடுகிறார், "பெண்ணின் தூண்டிவிடப்பட்ட ஆன்மா, உடல் ஆகியவற்றின் பண்புகளின் தொகுப்பினை நிரந்தரப் பெண்மை என்பது பற்றிய ஒரு தொன்மமாக இருக்கின்றது என்கிறார்கள்.இதனை இன்று ஒரே வகைமாதிரி என்றழைக்கிறார்கள். இதுவே இன்று பெண்மை பற்றிய மேலாதிக்கப் படிமமாக இருக்கின்றது" என்கிறார் (பாலற்ற பெண்பால்-பெண்பால் நபும்சகம் – ராஜ்கௌதமன், ப.22). மகட்போக்கிய தாயின் கூற்றாக அமையும் கயமனாரின் பாடலில், "வளமனைக்குரிய செல்வியே பந்தினை எறிந்து விளையாடி இளமைத்தன்மை உடையையாய் திரியும் இயல்பினையுடையையாகின்றாய். உன்

பெண்தன்மை(பெண்மை) அழிவதாக"(அகநானூறு, பா.எ.275.) எனக் கடிந்துரைக்கும் தாயைக் காணலாம். கயமனாரின் மற்றொரு பாடலில், அறிவினையுடைய இளைய மகளே என விளிக்கும் செவிலித்தாய், "உனக்கு முலைகள் அரும்பின, பற்கள் ஒளிகொண்டன, கூந்தல் முடித்தல் அமைந்தன, தழையுடை கொண்டனை, சுழன்று திரியும் நின் ஆயத்தாருடன் எங்கணும் போகற்க, நீ காவலும் எய்தினை, நம் வாயிலகத்தும் போகற்பாலையல்லை. நீ பேதைப்பருவத்தினையல்லை பெதும்பைப் பருவத்துப் புறத்துப்போனாயென்னை"(மேலது, பா.எ.7) என்று கட்டுப்பாடுகளை விதித்துக் கடிந்துரைக்கிறாள். குடவாயிற் கீரத்தனாரின் பாடலில் தன் மகளது தலைமுடியையும் முலைகளையும் பார்த்தும் மகளின் பெண்ணென்னும் இயல்பினை அறிந்தும் இற்செறியாது விட்டதாக வருந்தும் தாயைக் காணமுடிகிறது(மேலது, பா.எ.315). மதுரை அறுவைவணிகன் இளவேட்டனாரின் பாடலில் தோழி, கிளிகள் கொத்துமாறு தினைக்கதிர்கள் விளைந்தாலும் அற உணர்ச்சியில்லாத தாய் அங்கு நம்மைப் போக்காமல் இள முலைகளை தழைத்தல் கூடிய கூந்தலுடன் பல முறை நோக்குகிறாள் என்று கூறுகிறாள் (மேலது, பா.எ.302).

மேற்குறித்த பாடல்களின் கருத்துக்களைத் தொகுத்து நோக்க, இருவிதமான கூறுகள் பெண்தன்மையைச் சுட்டுவதில் தொழில்படுவதைக் காணமுடிகிறது. ஒன்று உடற்கூறு சார்ந்து பெண்மை/பெண்தன்மை முன் வைக்கப்படுகிறது. மற்றொன்று பெண்ணுடல் வளர்ச்சியடையும்போது அதன் பாதுகாப்புக்குறித்து வீட்டைவிட்டு வெளியே செல்லாதிருத்தல் எனப் பெண்ணின் நடத்தை குறித்ததுமாகின்றது. ஏனெனில் கயமனாரின் பாடல்கள் பெண் சுதந்திரமாக இயங்கும் தன்மையைக் கடிந்துரைக்கின்றன. பிற பாடல்களும் சுதந்திரமான இயக்கம் குறித்து நேரடியாகக் கூறாவிட்டாலும் இற்செறிக்காதுவிட்டேனே என வருந்துதல் பெண்ணைத் தினைப்புனத்திற்கு அனுப்பாதிருத்தல் எனப் பெண்ணின் அடக்கமான நடத்தை குறித்தான சிந்தனைகளைப் பதிவு செய்கின்றன. எனவே பெண்ணுடல் மற்றும் நடத்தை பெண்மையைச் சித்திரிப்பதாகிறது.

**மடப்பம்**

பெண்ணுக்குரிய பண்புகளுள் ஒன்றாகப் பாராட்டப்படும் 'மடம்' என்ற சொல்லுக்குக் கொளுத்தக் கொண்டது விடாமையாகிய பேதைமை, மென்மை, மடப்பம், அறியாமை எனப்பாட்டும் தொகையும் அகராதி பொருள் கூறுகிறது (பாட்டும் தொகையும்அகராதி, ப.130) அகநானூற்றுப்பாடல்கள் பல இடங்களில் பெண் மடப்பம் நிறைந்தவளென்றே பொருள் கூறுகிறது.

மதுரை மருதனிள நாகனாரின் பாடலில் தலைவன், தலைவியின் அழகிய மடப்பமாகிய குணத்தினை நினைப்பாயாயினை என்று இடைச்சுரத்தில் தன் நெஞ்சிடம் கூறுகின்றான் (அகநானூறு, பா.எ.365). கயமனாரின் பாடலில் செடி கொடிகள் வாடினாலும்தலைவியைவிடமடப்பத்தையுடையளாகிவருந்தும்தாயைக்காணமுடிகிறது (மேலது, பா.எ.259). ஒக்கூர் மாசாத்தியாரின் பாடல் மடமொழியையுடைய (மேலது, பா.எ.324). தலைவியைப் பற்றிப் பேசுகிறது. இளங்கீரனார் தம் பாடலில் மெத்தென்ற பிணிப்புச் சிறிது கை நெகிழினும் வருந்தும் அழகிய மடத்தகுவியைப் பற்றிப் பேசுகிறது (மேலது, பா.எ.289). இங்கு மட என்ற சொல் இளமையைக் குறிக்கிறது. பரணரின்

பாடலோ கொல்லிப் பாவையினைப் போன்ற மடப்பத்தால் சிறப்புற்ற மயோளைப் பற்றிக் கூறுகிறது (மேலது, பா.எ.62). இங்கும் இளமைத்தன்மை எனக் கொள்ளலாம். ஏனெனில் தலைவி கொல்லிப்பாவையுடன் ஒப்பிடப்படுகிறாள். கயமனாரின் பாடல் பெண்மான் போலும் பார்வையையுடைய மட நல்லாளைப்பற்றிக் கூறுகிறது (மேலது, பா.எ.195). மாமூலனாரின் பாடலும் மடப்பத்தையுடைய மனைவியைப்பற்றிக் கூறுகிறது. 'மடவோர் தழீஇய விறலோன் மார்பு' (மேலது, பா.எ.197), இங்கு சுட்டப்படும் மடவோர் என்ற சொல்லுக்குப் பாட்டும் தொகையும் அகராதி அறிவில ரென்றும் மங்கையரென்றும் பொருள்தருகிறது (பாட்டும் தொகையும் அகராதி, ப.130). கயமனாரின் மற்றொருபாடல் மடப்பத்தையுடைய அழகுகெட்ட தலைவியைக் காட்சிப்படுத்துகிறது (அகநானூறு, பா.எ.219).

கயமனாரின் பிறிதொரு பாடலில் இன்னாமையுடைய காட்டில் நேற்றுச் சென்றுவிட்ட பெரிய மடப்பத்தையுடைய என் மகள் என்று கூறும் தாயைக் காணலாம் (மேலது, பா.எ.275). இங்குத் தலைவியின் அறியாமை சுட்டப்படுகிறது. மகிழ்ச்சியால் நிறைந்த மடநோக்கைப் பற்றிய பதிவையும் (மேலது, பா.எ.297) காணமுடிகிறது. உடன்போக்கு மேற்கொள்வேன் என்று கூறும் தலைவியின் பார்வை மகிழ்ச்சியால் நிறைந்த நிலையில் இளமைத்தன்மையுடையதாகவும் இருந்திருக்க வேண்டும். பாலைபாடிய பெருங்கடுங்கோவின் பாடலில் தலைவன் நின் புறஅழகைக் காண சற்று முன்னே நடப்பாயாக எனத் தலைவியைக் கூறத் தலைவி முன்னே செல்ல நாணி மானை ஒத்த நோக்கத்துடன் மடம்கொள விலகி நிற்கிறாள் (மேலது, பா.எ.261). இங்கு மடம் என்ற சொல்லாட்சி நாணம் சூழ்ந்த தலைவியின் செயலைக் குறிக்கிறது.

மேற்குறித்த பாடல்களின் கருத்துகளைத் தொகுத்து நோக்க மடமாகிய சொல் அதாவது மடப்பம் என்ற சொல்லாட்சி கற்பித்ததை ஏற்றுக்கொள்ளும் குணம், மென்மையான இளகியமனம், மென்மையான மொழி, இளமைத் தன்மை, அறியாமை, நாணம் போன்ற பொருண்மைகளைச் சுட்டுவதாயிருக்கிறது.

**நாணம்**

ஆண், பெண் உறவு நிலையின்போது பெண்ணுக்குரிய நாணம் அவளைப் பேசவிடாமல் செய்கிறது. திருமணம் முடிந்த இரவில் தலைவன் தலைவியின் உள்ளத்திலிருப்பதை மறைக்காமல் கூறும்படிக்கேட்க தலைவி விடையளிப்பதற்கு மாறாக ஒய்யென இறைஞ்சுகிறாள் (மேலது, பா.எ.86) அவள் உணர்வை வெளிப்படுத்த நாணம் என்ற பண்பு தடைசெய்கிறது. நொச்சி நியமங்கிழாரின் பாடலில் தலைவி, 'அழகிய மையுண்ட கண்களில் படரும் பசலையானது நமது நெஞ்சை இடமாகக்கொண்ட பெரிய மார்பினைக் காரணமாக உடையது என அறிவிப்போம் கொல், அறிவியாதொழிவமோ என இருவகைப்பட்ட ஆராய்ச்சி ஒரு முடிபிற்கு வந்துள்ளது. நமது யாக்கையினின்றும் இனிய உயிர் பிரிவதாயினும் இது காமநோயால் உண்டானதென விளங்க உரையாதே' என்று கூறுகிறாள் (மேலது, பா.எ.52). இங்கும் தலைவியின் உணர்வை வெளிப்படுத்த நாணம் தடையாகிறது. மேலும் நாணம் என்ற பண்பு உயிர்மீதான ஆசையையும் வென்றுவிடுகிறது. எனவே வேறு எதையும்விடப் பெண்ணுக்கு நாணம் பெரிது.

தலைமகன் தேர்ப்பாகனுக்குரைத்த மதுரை இளநாகனாரின் பாடலில் தலைவனைப்பிரிந்துகாவல்பொருந்தியமனையில்இல்லில்உள்ளார்அறிந்துவிடுவாரோ

என அஞ்சி தலைவன் வருவானென உரைக்கும்படி கிளிகளைப் பயிற்றுவிக்கும் நாணம் மிகு தலைவியைக்காணமுடிகிறது (மேலது, பா.எ.34).

இப்பாடலில் தலைவியின் நாணமும் உணர்வு வெளிப்பாட்டு மறுப்பும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. பரணரின் பாடலில் பரத்தையானவள் ஊரனால் நமக்கு ஏற்படும் பழி ஏற்படட்டும், இனி நமக்கு நாணம் உண்டோ? ஊரன் சேரிக்கு வரவேண்டும், அவன் பெண்டிர் காண அவன் மார்பைச் சிறைசெய்யேனாயின் என் அழகு ஒழிவதாக என்று கூறுகிறாள் (மேலது, பா.எ.276). இக்கூற்று காமக்கிழத்தி சேரிப்பரத்தையிடம் கூறுவது என்பது நச்சினார்க்கினியர் கருத்து. எனவே காமக்கிழத்தியின் நாணம் அழிதல் பதிவுசெய்யப்பட்டுள்ளது. உணர்வு வெளிப்பாட்டு அனுமதியையும் காணமுடிகிறது. மேற்குறித்த கருத்துக்களைத் தொகுத்து நோக்க நாணம் என்ற பண்பு பெண்ணின் உணர்வு வெளிப்பாட்டையும் பாலியல் வெளியையும் கட்டுக்குள் வைக்கக்கூடியதாகவும் நாணம் உடைதல் பரத்தையின் பாலியல் வெளியைக் கட்டுப்பாடுகளற்றதாயும் உருவாக்குவதைக் காணமுடிகிறது.

**மென்மை**

இலக்கியங்களில் பெண்ணுடல் குறித்தும் உள இயல்பு சார்ந்தும் 'மென்மை' என்ற தன்மையே பதிவாகியுள்ளது. அகநானூற்றுப்பாடல்களில் பல இடங்களில் பெண் மென்மைத் தன்மையுடையவளென்றே பேசுகிறது. தோழி கூற்றாயமையும் பெருந்தலைச்சாத்தனாரின் பாடல் மென்மைவாய்ந்த தலைவியைப்பற்றிப் பேசுகிறது (மேலது, பா.எ.13). தோழியால் உடன்போக்கு உணர்த்தப்பட்ட தலைவனுக்கு யானைகள் இயங்கும் காட்டுவழியில் மென்மைத்தன்மை வாய்ந்த தோளையுடைய தலைவி உடன் வருவாளென்பது நகையாயிருக்கிறது (மேலது, பா.எ.121). எருக்காட்டூர் தாயங் கண்ணனாரின் பாடலில் செலவுணர்த்திய தலைவனிடம் தோழி, பிரிதல் துன்பினைத் தாங்க இயலாத தலைவியின் வலிமையற்ற மனம், மென்மைத்தன்மை, ஆற்றியிருக்க இயலாத தன்மை என்பனவற்றைச் சுட்டுகிறாள் (மேலது, பா.எ.319). இது தலைவன் மீதான அதீத

**அன்பின் வெளிப்பாடு.**

**வன்மை**

பெண் மென்மையுடையவளென்ற பதிவு இருந்தாலும் அதற்கு நேரெதிரான வன்மை, போர்க்குணம் இன்னோரன்ன தன்மையும் உடையவள் என்பதையும் பாடல்கள் பதிவுசெய்துள்ளன. கயமனாரின் பாடலில் மகட்போக்கிய தாய், "பல நாடுகளையும் தேயங்களையும் கடந்துபோன வன்கண்மையுடையாளுக்கு அழகு செய்விப்பவள் போல வாடியுள்ளாய்" (மேலது, பா.எ.383) என்று வயலைக்கொடியிடம் பேசுகிறாள். இதில் தலைவியின் வன்கண்மையும் பலதேயங்களைக் கடந்து செல்ல இயலும் என்ற செய்தியும் பதிவாகியுள்ளன.

பரணரின் இருபாடல்கள் அன்னிமிஞிலி என்ற பெண் போராளியைப்பற்றிப் பேசுகின்றன. கோசர்கள் பயற்றில் பசுமேய்ந்ததன் பொருட்டு வாய்மைமிக்க தம் தந்தையின் கண்களைப் பிடுங்கிக் கொடுமைப்படுத்தியதன் காரணமாக கலத்திலிட்டு உண்ணாமலும் தூய உடையினை உடாமலும் சினத்தினால் ஏற்பட்ட நோன்புக்குரிய

வடிவம் மாறாமலும் போர்த்திறம் வாய்ந்த திதியன் என்பவனுக்குக் கூறி கோசரது இனிய உயிர்களைப் போக்கக் கண்டு சினம் ஒழியப்பெற்ற அன்னிமிஞிலி எனத் தன் தந்தைக்காகப் போராட்ட குணத்தை வெளிப்படுத்திய போர்க்குணம் மிக்க பெண் ஒருத்தியை பரணரின் பாடல் பதிவு செய்கிறது (மேலது, பா.எ.262). இதே செய்தியை, "தந்தையின் கண்ணெழிலைக் கெடுத்தமைக்காக திதியனது அழுந்தூரில் கோசரை அச்சமுண்டாகக் கொல்வித்து வேறுபாடு தீர்ந்த அன்னிமிஞிலி" (மேலது, பா.எ.196) எனப் பரணரின் மற்றொரு பாடலும் பதிவு செய்கிறது. பெண் வன்மைமிக்கவளும்கூட என்பதற்கான சான்றுகளை முன்வைப்பவையே மேற்குறித்த பாடற்கருத்துகள்.

**தாய்மை**

பெண் வன்மை நிறைந்தவள் மட்டுமல்ல தாய்மை நிறைந்தவளுமாக இருந்திருக்கிறாள். கயமனாரின் பாடலில் மகட்போக்கிய தாய், சீரலில் நீர் கொண்டுவந்து ஊற்றி தாயைப்போல முகத்தினைப் பார்த்துப் பெயர் வாளன்றோ (மேலது, பா.எ.383) என்று வயலைக்கொடியிடம் கேட்கிறாள். கயமனாரின் கூற்றில் அரவணைத்து வளர்க்கும் தாய்மை வெளிப்படுகிறது. மாமூலனாரின் பாடல் மகவினைக் காணாது தேடித்திரியும் பெண்டிர் போல பிடியானை தன் கன்றினைத் தேடித்திரியும் மலையைப் பற்றிக்கூறுகிறது (மேலது, பா.எ.347). இது தாய்மையின் பொறுப்புணர்வை உணர்த்துவதாகிறது. உடன்போக்கு மேற்கொண்ட மகள் குறித்துத் தாயானவள், நானும் தோழிமாரும் தனிமையில் வருந்த என் அஞ்ஞை சென்றடைந்த இடம் தலைமை வாய்ந்த முதிய ஊர்களில் முகமறிந்த மக்களையுடையதாகுக என்று கூறுகிறாள் (மேலது, பா.எ.15). தாயின் கூற்றில் தனிமைத்துயர் வெளிப்படுகிறது. தாய் தன் மகளை என் அஞ்ஞை என அதாவது என் தாயென அழைக்கிறாள். இதில் தாயின் அன்பு வெளிப்படுகிறது. அவள் செல்லுமிடம் புதியர்களைப் புரக்குமிடமாக இருக்க வேண்டுமென்கிறாள். இதைக் கூறும்போது எமது மிக்க விருப்பம் கைகூடுவதாயின் என்று தொடங்குகிறாள். இச்சொற்கள் தலைவி பாதுகாக்கப் படவேண்டுமென்ற அவாவை வெளிப்படுத்துபவையாக உள்ளன. மாமூலனாரின் பாடலில் என் மகள் உடன்போயதற்கு வருந்தவில்லை, என்னைவிட்டுப் போகாத உயிருடன் நொந்தேன் என்கிறாள் தாய் (மேலது, பா.எ.55). மகளின் பிரிவு உயிர் மீதான ஆசையையும் வெல்கிறது. இந்நிலை உணர்த்துவது தாய்மை உணர்வையே. இவ்வாறு பல பாடல்கள் அமைந்துள்ளன. தாய்மை என வரும்போது

பொறுமை, அடக்கம், தியாகம் போன்ற பண்புகளடங்கியவர் என்ற சிந்தனை நமது சமுதாயத்தில் உண்டு. ஆனால் ஆதிகாலச் சமுதாயம் இரக்கம் அன்பு போன்ற பண்புகளைத் தாய்மையில் கண்டது. இதன் பிரதிபலிப்பை சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது. 'தாய்மை'ப் பண்பைப் பெண்ணுக்கானதாக வரலாறு பதிவுசெய்கிறது. தொன்மைச் சமுதாயப் பெண்கள் குழந்தைகளைப் பராமரித்து அவர்களைச் சிக்கலான சமூக மற்றும் அறிவுத்துறைகளில் பழக்கப்படுத்தினார்கள் என்று கூறும் ரோஸலிண்ட்மைல்ஸ் அவர்கள், "பரிணாம வளர்ச்சியில் தாய்மைப் பணியின் தலையாய முக்கியத்துவம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை" என்ற ஆதங்கத்தையும் முன்வைக்கிறார் (உலகவரலாற்றில் பெண்கள் - ராதாகிருஷ்ணன்.வி, ப.11).

தாய் – சேய் உறவு என்பது தொன்மைச் சமுதாயத்தின் எச்சமாகிறது. "குழந்தைகள்

பெண்களுடையவைகளாயிருந்தன. அவளுடைய குழுவின் உறுப்பினர்களாயிருந்தனர். சமூக ஒழுங்கமைப்பின் கரு எப்போதும் பெண்ணாகவும் அவளுடைய குழந்தைகளாகவும் குழந்தைகளின் குழந்தைகளாகவுமே இருந்தது" என்ற மானிட வரலாற்றறிஞர் டபிள்யூ.ஐ.தாமசின் கருத்து தாய் – சேய் உறவு குறித்த தொன்மைச் சிந்தனையை முன்வைக்கிறது (மேலது, ப.14) என்றாலும் தந்தைவழிச்சமுதாயத் தோற்றத்தில் பெண் குழந்தையைப் பெற்று தந்தையின் சொத்துக்கு அதை வாரிசாக்கும் மனித இயந்திரமாக மாறிப்போன அவலத்தையும் மறுக்கவியலாது.

ஜெர்மெய்ன்கிரீர் அவர்கள் பெண்மையின் கருத்தமைவு குறித்த சிந்தனையை வெளிப்படுத்தும்போது, "பெண்பாலைப் பிற பாலியல் ஜீவிகளின் ஆண்களின் பயன்பாட்டுக்கும் பாராட்டுக்கும் உரிய ஒரு பாலியல் பொருளாகக் கருதுகிறார்கள். அவளது பாலியல்தன்மை அடங்கிப்போவது என்று அடையாளப்படுத்தி அதன்வழியாக அவளது பாலியல்தன்மையை மறுக்கிறார்கள். பிழைபட எடுத்தாள்கிறார்கள். சுதந்திரத்தின் குறிகளும் அவளுடைய பிற உடல் வலிமையும் அடக்கப்படுவதைப் போன்று பெண்மை பற்றிய கற்பனை பிம்பத்திலிருந்து பெண்குறி மறைக்கப்படுகிறது. புகழவும் பரிசளிக்கப்படுவதுமான பெண்பால் பண்புகள் : நபும்சகமாக்கப்பட்ட அடக்கம், சதைத்திரட்சி, மடமை, மென்மை, அளவுகடந்த நேர்த்தி" என்று கூறுகிறார். மேலும் அவர், ஆண்பாலைவிடப் பெண்பால் கட்டமைப்பு ரீதியில் வலுவாக உள்ளது என்பதற்குப் பெரும் ஆதாரம் இருக்கிறது என்றும் கூறுகிறார். பெண் நீண்டகாலம் வாழ்வதாகவும் வளர்ச்சியின்போது ஆண்பாலே பெண்பாலைவிட அதிகமாக மடிவதாகவும் பெரும்பான்மையான உடல் ஊனங்கள் ஆண்பாலிலேயே அதிகமாகக் காணப்படுவதாகவும் கூறுகிறார்48.

பெண்மை குறித்த அடக்கம், மென்மை, மடப்பம், நிறை, நாணம், அச்சம் போன்ற பண்புசார் கருத்தமைவுகளை அகநானூற்றுப்பாடல்கள் பதிவு செய்திருந்தாலும் ஜெர்மெய்ன்கிரீர் குறிப்பிட்டதுபோல பெண் வன்மை மிகுந்தவள் என்பதையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. பெண்ணின் பாலியல் சார்ந்த உணர்வு வெளிப்பாட்டில் அவளுக்கு வரையறையிருந்ததையும் பரத்தை என்ற நிலையில் அது உடைபடுவதையும் பாடல்கள் உணர்த்தியுள்ளன.

**முடிவுரை**

உடற்கூறு அடிப்படையில் ஆண், பெண் என்ற இருபாலினத்தைக் கொண்டு வளர்ந்து நிலைபேறு அடைந்துவரும் சமுதாயம் பண்பாட்டு அடிப்படையில் ஆண்மை பெண்மை என்ற வகைமாதிரிகளைக் கொண்டு இயங்குகிறது. இந்நிலையில் பெண்மைகுறித்த கருத்தமைவாக அகநானூற்றுப்படல்கள முன்வைத்துள்ள சிந்தனைகளை ஆய்வுக்குட்படுத்தியதில் 'பெண்மை' என்ற சொல்லாட்சி பெண்ணின் உடற்கூறு மற்றும் பெண் நடத்தை சார்ந்து பயன்படுத்தப்படுவதைக் காணமுடிகிறது. பெண்ணுடல் வளர்ச்சியடையும் போது அது பெண்மையாகிறது. அந்நிலையில் அவள் இல்லத்தினுள் அடங்கி அடக்கமாக இருப்பதும் பெண்மையைச் சுட்டுவதாகிறது. எனவே அடக்கம் என்ற ஒழுக்கம் பெண்ணுடல் வளர்ச்சி இரண்டும் இணைந்து பெண்மைக்கு அடித்தளம் அமைக்கின்றன எனலாம். பெண்மைக்கு எனச்சிறப்பாக எடுத்துரைக்கப்படும் 'மடப்பம்' என்ற பண்பை வலியுறுத்தும் மடம் என்ற சொல்லாட்சி

கற்பித்ததை ஏற்றுக்கொள்ளும் தன்மை, மென்மையான இளகியமனம், மென்மையான மொழி, இளமைத்தன்மை, அறியாமை, நாணம் போன்ற பொருண்மைகளைச் சுட்டுகிறது.

பெண்மையானது அறியாமை நிறைந்ததாகப் பதிவு செய்யப்படுவது என்பது பெண்ணின் அறிவு வெளியை மறுப்பதாகிறது. பெண்மையென்ற கருத்துருவாக்கத்தை வடிவமைப்பதில் நாணம் என்ற பண்பும் இன்றியமையாப் பங்குவகிக்கிறது. பெண்ணின் மன உணர்வுகளை வெளிப்படுத்தாதிருக்க நாணம் என்ற பண்பைப் பெண்ணுக்கு வலியுறுத்தி அவளது பாலியல் வெளியைக் கட்டுப்படுத்தி வைத்திருந்ததையே பாடல்கள் உணர்த்துகின்றன. தலைவன் பற்றிய நினைவை வெளிப்படுத்தக்கூட நாணம் தடைசெய்கிறது என்பது மிகவும் சிந்தனைக்குரிய நிலையாகும். ஆனால் பரத்தையர் நாணம் என்ற பண்பை உடைத்துத் தம் உண்மை உணர்வைப் பேசுகின்றனர். எனவே பெண்மை என்ற கருத்துருவாக்கம் குடும்ப அமைப்பில் அடங்கும் தலைவிக்கு வேறாகவும் பரத்தைக்கு வேறாகவும் இருக்கிறது.

பெண் மென்மையானவள், இளகிய மனமுடையவள் என்று கூறும் பல பாடல்களைக் காணமுடிகிறது. ஆனால் பெண்ணின் வன்மைநிலையும் பதிவாகியுள்ளது. பெண்ணின் போர்க்குணத்தை அன்னிமிஞிலி என்ற பெண் போராளியைப்பற்றிய பதிவு உறுதி செய்கிறது. மேலும் பெண்மை என்ற கருத்துருவாக்கத்தினுள் தாய்மை உணர்வும்

அடக்கம். பெண்நிலை இங்கு உருகும் நிலையாகிறது. சேய் என்று வரும் போது தாய்மை இரக்கம், ஓயாத அன்பு முதலானவற்றைத் தன்னுள் கொண்டதாக இருக்கிறது. தாய்-சேய் உறவின் மேன்மையைப் புலப்படுத்தல் என்பது தாய்வழிச் சமுதாயத்தின் எச்சமாகிறது. ஏனெனில் ஆதிசமுதாயத்தில் தாயே குழந்தைகளைக் காக்கும் பணியை மேற்கொண்டாள். ஆனால் தந்தைவழிச்சமுதாயம் குழந்தைவளர்ப்பைத் தாய்க்குக் கடமையாக்கியது. பெண்மை குறித்த கருத்தமைவு பெண்ணின் சார்பு நிலையை உணர்த்துகிறது. அதே நேரத்தில் பெண்ணிடம் காணப்பட்ட தாய்மை, பெண்வன்மை போன்ற நிலைகள் பெண்ணின் தலைமைப் பண்பைச் சுட்டுகின்றன.

**துணைநின்ற நூல்கள்**


1. கீதா.வ./ கிறிஸ்டி சுபத்ரா (2009), பாலின பாகுபாடும் சமூக அடையாளங்களும், பாரதி புத்தகாலயம், சென்னை.
2. சாரதாம்பாள். செ. (2005), ‘பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண்ணெழுத்துத் திறனாய்வும்., உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
3. பாட்டும் தொகையும் (1981), ஆசிரியர் குழு, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்,சென்னை
4. ராதாகிருஷ்ணன். வி. (2001) (மொ.ஆ), உலகவரலாற்றில் பெண்கள் மூலம் : ரோஸலிண்ட்மைல்ஸ் நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
5. ராஜ்கௌதமன் (2011)- பாலற்ற பெண்பால் பெண்பால் நபும்சகம் மூலம்: ஜெர்மெய்ன் கிரீர் விடியல் பதிப்பகம்,கோவை.
6. நா.மு.வேங்கடசாமி நாட்டார் (1962) (உ.ஆ) – அகநானூறு களிற்றியானை நிரை
7. ரா.வேங்கடாசலம் பிள்ளை , திருநெல்வேலிசைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி–6.

8. நா.மு.வேங்கடசாமி நாட்டார் (2007) (உ.ஆ) - அகநானூறு மணிமிடை பவளம்
9. ரா.வேங்கடாசலம் பிள்ளை திருநெல்வேலிசைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை – 18.
10. நா.மு.வேங்கடசாமி நாட்டார் (2008)( உ.ஆ) - அகநானூறு நித்திலக்கோவை ரா.வேங்கடாசலம் பிள்ளை திருநெல்வேலிசைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை – 18.

## References

1. Gita.V./ Christy Subatra (2009) – Gender Discrimination and Social Identities Bharati Budhkalayam, Chennai.
2. Sarathampal. Sec. (2005) - 'Feminist Psychoanalysis and Feminist Literature Review., World Institute of Indian Research, Chennai.
3. Pattum thogaiyum (1981) – Editorial Board, New Century Bookhouse, Chennai.
4. Radhakrishnan. V. (2001) (MD) - Women in World History By : Rosalindmiles New Century Bookhouse, Chennai.
5. Rajgauthaman (2011) – Asexual Feminine Feminine Nephew By: Germaine Greer Dawn Publishers, Coimbatore.
6. N.M.Venkatasamy Natar (1962) (U.A.) – Akananooru Kalitriyanai Nirai
7. Ra.Venkatachalam Pillai, Tirunelveli Saivasi Siddhanta Nuupupkazaghagam, Tirunelveli-6.
8. N.M Venkatasamy Nattar (2007) (UA) - Nine Hundred Hour Coral
9. Ra.Venkatachalam Pillai Tirunelveli Saivasi Siddhanta Nuupdipukagazhagam, Chennai-18.
10. N.M.Venkatasamy Nattar (2008)(U.A.) - Akananoor Nithilakovai Ra Venkatachalam Pillai Tirunelvelisaivasiddhanta, University of Press, Chennai – 18.

### தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

**மணிமேகலை. இர, "அகநானூற்றுப் பாடல்களில் பெண்மைக் கருத்தமைவு"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 5, சனவரி 2025, பக். 52-60

### Cite this Article in English

**Manimegalai.R, "Concept of femininity in Akananuru Poems"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 5, January 2025, pp. 52-60